
சரவணை கிழக்கு மயிலப்புலம்

# திருப்பொலி ஐயனார் அருட்பாமாலை



# THIRUPPOLI AIYANAAR ARUTPAMAALAI

தீவகம் வே.இராசலிங்கம்

THEEVAGAM V.RAJALINGAM

மயிலப்புலம்
கட்டுவன்வான்

# திருப்பொலி ஐயனார் அருட்பாமாலை!

ஆக்கியோன்:
தீவகம் வே. இராசலிங்கம்

வெளியீடு:
சோழாவத்தை-பள்ளம்புலம்
மக்கள் ஒன்றியம்-பிரான்ஸ்

# நூலின் விபர அட்டவனை

நூலின் பெயர்:திருப்பொலி ஐயனார் அருட்பாமாலை

நூலாசிரியர்: தீவகம். வே. இராசலிங்கம்

வெளியீடு: சோழாவத்தை-பள்ளம்புலம் மக்கள் ஒன்றியம் பிரான்ஸ்

முதற்பதிப்பு: ஆனி-2013

தட்டச்சு-வடிவமைப்பு:தீவகன்.

அட்டைப்படம்: தீவகன் வரைகலை

பதிப்புரிமை: நூலாசிரியருக்கே.

**NAME OF THE BOOK:** Thiruppoly Aiyanaar ArutpaMalai

**AUTHOR:** Theevagam.Ve.Rajalingam

G.C.E(O.L/A.L) English Medium, Dip. in. Web.Design

**LANGUAGE:** Tamil

**FIRST EDITION:** January (June) 2013

**TYPE SETTING AND DESIGN :** Theevagan

**FRONT COVER PAGE:** Deevagan Graphics

**NUMBER OF COPIES: 500.**

**COPY RIGHT:** Author.

**PUBLICATION:** Cholawaththai-PallampulamMakkal Ontrium (People Heritage Associaion)-FRANCE

**PRINTERS:** JJ Printers-Scarborough (416-298-9322)

# AIYANAR

## (Truths and Views of Aiyanaar in Internets)

Ayyanar (Tamil:அய்யனார் or ஐயனார்) is a regional Tamil male deity who is popular among the rural social groups of South India, specifically Tamil Nadu. In the old Tamil literature he is mentioned as Sathanar and in Vedic stories, Ayyanar is considered as one of the several local manifestations of Sastha. The deity is also popular among vast majority of South Indian & Sri Lankan (read Dravidian) Hindus and some Buddhists in Sri Lanka. He, along with his two female consort deities, is the central deity surrounded by 21 associate folk deities identified as the Kaval Deivam (guardian angel). Ayyanar temples are found in almost every minority Tamil village in Sri Lanka.

## Ancient tradition

In ancient Tamilakam, people venerated the Veerargal and had the formless stones (Veera Kal or Veerakkal) erected in memory of these fallen warriors or any person who sacrificed his life for a good cause such as protection of welfare of the society or community. The Veera kal that have fully morphed into cultic shrines can be found across South India and especially Tamil Nadu.

This has slowly transformed into the Ayyan or Saathan (Tamil for Sanskrit sasthan) worship system with a symbolic horse riding along with the venerated departed soul. Later transformed into the Vedic phase, Ayyanar has been depicted with two consorts - Poorna and Pushkala. Ayyanar is believed to protect the poor and ensure justice and self-discipline among its believers. Thus there are several local manifestations of Ayyanar along with two consorts in several villages near thick forests and water reservoirs each having its own folk tale.

The unique and inspiring popularity of the system is that the Ayyanar worship system provides an opportunity to its mass followers to trace their place of origin, ancestral roots, native culture and character and clan lineage even after several generations. Such family clan followers of Ayyanar worship system install new Ayyanar worship centres in sacred groves (called as Sastha kavu in Kerala and Kanyakumari districts and vanams or paimbozhil in Tamilnadu) in new locations with the permission obtained from the native Ayyanardeity through an oracle system during the Annual mass conventions.

## Worship

Large sculpture of Ayyanar riding a horse at a village shrine. Ramanathapuram District, Tamil NaduAyyanar or Sathanar worship is a very ancient ancestral clan-based worship system linked to nature and fertility worship. The festivals of Ayyanars are celebrated in Sacred Groves during spring season by all the related clan. Ayyanar shrines are usually located at the peripheries or boundaries of rural villages and the deity is seen riding a horse with a sword. Weapons such as a trident or a lance are also associated with the shrine. Most officiating priests are non-Brahmins and derive from local lineages that had initiated the cult centers generations ago.

The worship pattern is non-agamic and is associated with sacrificial offerings of pure vegetarian food. However animals such as chicken and goats are offered to few of the selected 21 associate deities (Kaval deivangal) such as Karuppa samy, Sudalai Maadan samy and some other Amman deities located within Ayyanar temple for favors. In return the local priest might offer holy flowers

or Veeputhi (holy ash) to the worshippers. Folk Tales like Koothhu and Folk arts like Villupattu are enacted to bring out the message of the Ayyanar folk story to one and all.

In South India, Aiyanar God worshipped in open grounds surrounded by trees holds an important position in the local villages because of the values installed in family and community life. Aiyanar System is the base for forming large family clan associations and maintaining family values in rural areas.

Aiyanar worship represents a non-learned, non-Vedic form of worship. Often community life and family values are valued than individualist life mode. So a large number of gods at least 61 divine servant agents are present along with at least 18 to 21 associate deities. A family life or community life cannot be smooth and happy only if there is place to accept and accommodate every kind of people.

But with the divine nature, Often Aiynar is pictured riding on a white horse, fighting against demons and evil gods that are threatening the village.

An Aiyanar temple, various clay figure and idols reflects the social hierarchy which exists in the villages of Tamil Nadu. The gods are ranked according to the social and economical hierarchy in the village, and as in social life, the highest ranking gods are vegetarian, whereas the lower ranking ones are non-vegetarian. A temple is often not a building, but one or more figures giving importance to each and every ancestral local god who are collections of people belonging to various community groups.

Owing to assimilation and syncretism, Sinhalese Buddhist people of Sri Lanka also venerate Ayyanar, calling him Ayyanayake.

## SASTHA, AIYYANAR-AYYAPPAN

The Subject—Matter of "Ayyappa" is classified under the three major heads

**SASTHA** (As per puranas)**AYYANAR** (as per legends) and

**AYYAPPAN** (as per traditional story based on Historic events)

In various puranas like SKANDAM, LALITHOPAKYANAM, BKAHMANDA PURANAM etc, it is said that Lord Hariharaputhra was born to Shiva and Mohini (Vishnu) after PALAZHI MADHANAM, which dates back to krutha yoga. Why Sastha was born of two positives Shiva & Vishnu? A Demoness MAHISHI was perpetrating attrocities in this world and in the nether worlds. She got a boon from Brahma that slain should be killed by a child born of two positives, Hari and Hara, that too after the child's undergoing servitude to a human being for a period of 12 years. To fulfill the boon got by Mahishi and to destroy that evil force, Sastha was born of Shiva and Vishnu. Skandam says that Lord Sastha with His two consorts appeared before Indra and Indirani to protect them.

This appeared even before the avatar of Lord Muruga. References of Sastha appear in various Puranas and Upa-Puranas spreading over the other three yugas, including Ramayana and Mahabaratha. As the story goes, Lord Hariharaputhra was wedded to Pushkala Devi first and then won the hands of Poorna subsequently. To comply with the boon of Mahishi, He took the birth of a son for servitude to a human being. He materialised himself the shape of a tiny child called "MANIKANTA" on the banks of Holy River Pambha, brought up by Pandala King, healed the deaf and dumb boy of HIS Guru, gone to the dense forests as per evil designs of His stepmother, slained Demoness Mahishi, brought leopard milk for His step-mother and took to Brahmacharya yoga at Sabari Hills.

The legendary tales on Lord Dharma Sastha of Sabhari Hills are well

known, and worldwide that "He was born of Hari and Hara, manifested Himself as Manikanta on the banks of Holy River Pambha. Brought up by king of Pandalam, he brought leopard milk to cure His ailing mother.

On redemption, Mahishi requested the Lord to marry her. Lord replied: "In this Avatar as Manikanta, I'm a Brahmachari. I shall opt to marry you when no kanni Ayyappa (one who is trekking Sabari Hills for the first time`) turns upto the Hills; until such time, you may join me in doing penance near my temple as Maligapurathu Manja Matha.

From the above, we can understand that the Lord is a Brahmachari as well as a wed.

As per traditional songs, and Dhyana slokas, Lord has taken Eight Avatars and Eight Roopas.

Lord Dharma Sastha Himself designed the shrine and the image; selected the spot for the shrine; the image was, installed by Parasurama; Agasthiya Rishi initiated the Poojas there. The Hill was named after the great Tapaswini Sabari of Ramayana fame. The sanctity of the Sabari Hill would be same as Varanasi and the nearby Pampa 'River would equal another Ganges in sanctity. Those who climb the Holy 18 steps with irumudi on their heads are blessed with immortality and raised to the State of Nirvana.

## SASTHA WITH HIS CONSORTS

Worshipping Lord Sastha with His consorts has been in vogue in Tamil Nadu and Kerala from time immemorial. In countryside temples spread over Tamil Nadu, Sastha is being called "AYYANAR" with His two consorts. In Kerela too, Sastha is worshipped with His consorts for eg. Noorani, Thirunilay, Achankoil etc. In one of the five Abodes of Sastha, at ARYANKAVU (near Shencottah) Sastha Thirukalyanam is being performed By TRAVANCORE DEVASWOM BOARD. With all religious rites on the night of l0th of Dhanur Masya (prior to Mandalabhishegam day) every year, for ages past.

He has lieutenants like Karuppan, Veeran, Madurai Veeran, Kathavarayan - Bhootha Kanas, based on Shilpa Sastra, and dhyana slokas, the images of Parivara — Devathas are drawn. Some folk stories among many about Ayyanar are visualised. One based on Dhikshitha Vijayam by Appayya Dhikshithar – a Veteran Saivite Exponent, another based on Mahabaratha episode where Arjuna fought with Shiva in disguise of a Kiratha (hunter) before getting pasupathasthra. A role is played by Sastha here.

Ayyappan - a human being like ours, whose living period dates back by 950 years i.e. 1125 to 1150 A.D. in Kerala. However, so many books are written on this story by Srivaraham E. V. Pillai, Ramavaram Sri Murali (famous E Malayalam author) Dr. Sridharan Nair, author Negavalli, Devaswom Board publication, Bhavans Journal Publication on "A Pilgrimage to Sabhari" by Sri K. R.Vaidyanathan etc. No devotee seems to have attached any significance or importance that has to be given to this, to allay so many misgivings on Makara Jyothi, Vavar etc. Successors of Pandalam dynasty, Poonjar palace and some other living generation add credence to this story. Some monuments, historical Places of interest, folk songs in Malayalam put together vouch for this story, which is enumerated in detail in the page mentioned below.

# Chithakoor Ayyanar (Sevuga Perumal)

Ayyanar is the main guardian deity of the villages of Tamil Nadu. Normally this imposing terracotta figure is seen in the boundary of the village. Surrounding him would be the colorful terracotta war steeds. In some temples the idols of Poorna and Pushkala who are his consorts are also present. Along with him normally Goddess Karuppu (black) is also present. He is also called Kari, Purathuvan, Kadal vannan, Chathan, Poosanaikelvan, Putkalai manavalan, Masathan, Kondayuthan, Arihara kumaran etc.

Chithakoor is a small village in the Pudu kottai district of Tamil Nadu near Avudayar Kil. He presides over more than one hundred villages surrounding Chithakoor. He is called Sevuga Perumal ayyanar( Ayyanar who is a servant god)

It seems he was once upon a time the presiding deity of Singanam puri which is about 80 km from Chithakoor. One day he rode on his war steed and reached Chithakoor. He liked the pleasant environment of Chithakoor. He tied his horse near the water source of the village and went in to the village, knocked the doors of rich people and told them, " I have decided to stay near your water source. Please build a hut for me." When they refused to believe it seems he told, "Tomorrow, you go to the water source . You will find my steed there. "At the strike of morn the entire village rushed to the water source and saw the statue of the horse,. Then they realized that the man who came and woke them up was indeed Ayyanar. They immediately started the job of building a hut and started collecting leaves and sticks for that purpose. It seems one stranger who was passing through the village that day , happened to take one of those sticks. It seems he lost his eye sight as soon as he came out of the village. He ran to the water source and told Ayyanar that it was his mistake. He promised to return 1000 sticks instead of the one stick he has taken. It seems he regained his eye sight. From then onwards , the villagers realized that their Ayyaanar was a very serious God and would punish them if they do a mistake. Even to this day he is the court of last resort to all the villagers of Chithakoor. Whenever they have a problem regarding another person they go to the temple of Ayyanar , pay Rs 12.50 and lodge a complaint on either a Tuesday or Friday.. It seems their problem is immediately solved. Since people believe that the punishment of Ayyanar is terrible, they tell the truth in front of him, ask an apology if they have committed a mistake etc.

Several miraculous events are supposed to have happened the village. It seems once their water source went dry. All villagers went and complained to the Ayyanar. The Samiyadi (person in whom God has entered) entered in to a trance and asked them, "Do you want a rain or do you want your water source to be filled up?". It seems the villagers chose the second alternative. Next day morning their water source was full without a single drop of rain.

Chithakoor Ayyanar it seems is very particular about his dues. It seems one day, he appeared in the dream of a rich man and asked him, "Why have not the given me bath with the orange which was given by a devotee?". Next day the rich man rushed to the temple located the orange and got the sacrificial bath done.

The Ayyanar statue at this place has a whip in his hand. ,He is surrounded by Pooranam and Pushkalam , who are his consorts. On his right side there is a temple for Big Karuppu and Small Karuppu and surrounding the temple are Adambur Kali, Sannasi, Sidhi Vinayaga, Anjaneya, Valli etc. It seems initially Ayyanar was housed in a thatched shed. One day he appeared in the dream of a villager and wanted him to build a tiled temple for him. This was immediately carried out.The temple festival is on Chithra Pournami day. Ten days before the festival Ayyanar is taken to his original village Singanampuri.

# அணிந்துரை!

## கலாநிதி சைவப்புலவர், பண்டிதர்
## செ.திருநாவுக்கரசு
### (ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர்)

இறைநிற்றல் என்பது எல்லோராலும் செய்யக் கூடியதுதான். ஆனால் எல்லோருக்கும் வாய்ப்பதரிது. "**தவமும் தவமுடையார்க்கு ஆகும்**" என்பதுபோல் நிகழக் கூடியது. பிறந்த மண்ணை உயிரினும் மேலாக நேசித்தல், தவழ்ந்து ஓடியாடி வளர்ந்த இடத்தை நெஞ்சில் இருத்திப் போற்றுதல், கல்வி கற்றுக் கலைகள் பல தெரிந்து நல்ல வரோடு கூடிக் குலாவி நல்லறம் வளர்த்த நாட்களை மீட்டிப்பார்த்தல், இன்பத்தில் இறுமாந்து விடாமலும், துன்பத்தில் துவண்டுவிடாமலும் வழிகாட்டி வாழச்செய்த சொந்த ஊரை உள்ளத்தால் துறந்துவிடாமல் உயர்த்திப் பிடித்துத் தன் வாழ்நாள் முழுவதும் உறவு கொண்டாடு தல் முதலானவை நல்லவர்களின் வல்லவர்களின்-சிந்தனையாளர் களின் சீரிய பணி.

உள்நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளினால் புலம் பெயர்ந்து ஐரோப்பிய-வட அமெரிக்க நாடுகள் பலவற்றில் வாழ்பவர் கள் பலரும் தவறவிட்ட ஆட்டுக்குட்டியைத் தேடித்திரியும் இடைய னைப் போல் தாய்மண்ணின்-பிறந்த ஊரின் நினைவுகளால் ஈர்க்கப் பட்டுத் தவிக்கிறார்கள். தம்மால் முடிந்ததைத் தாம் உயிர்ப்புடன் வாழச் செய்த ஊருக்குச் செய்துவிட ஆர்வம்கொண்டு செயற்படுகி றார்கள். அத்தகையவர்களில் ஒருவராக, மண்ணின் மாண்பினை மறக்க முடியாத மனிதராக விளங்குபவர்தான் தீவகம். வேலாயுதர் இராசலிங்கம் என்ற கவிஞர்-எழுத்தாளர்-பத்திரிகையாளர்-சமூகப் பணியாளர். அவர் தமது பிறந்த ஊரான சரவணையூர் பள்ளம்புலம் எனும் பதியில் கோவில் கொண்டிருக்கும் தெய்வங்கள் மீது பக்திப் பாமாலைகள் பாடி, அவற்றை நூல்வடிவில் கொணர்ந்து, ஊரின் பெருமையையும், அங்கு கோவில் கொண்டருளும் கடவுளர்களின் மகிமையையும் உலகறியச் செய்வதில் பெருமுனைப்போடு ஈடுபட்டு ழைப்பது வரவேற்கத்தக்கதாகும். "**பிறந்து மொழிபயின்ற பின்னெல் லாம் உன் சேவடியே சிறந்து நின்றேன்**" எனக் காரைக்கால் அம்மை யார் பாடி உருகியது போன்ற நினைவுகளுடன், நெஞ்சில் அலை மோதும் உணர்வுகள் ரீங்காரமுடன், இறையனுபவங்களையும் அவை பற்றி எண்ணச் சிதறல்களையும் ஆத்மார்த்தமாக உள்வாங்கிப் பாடிய பாமாலைகள் யாவும் வாடாமலர்களானானவை. இறைபக்திப் பாமா லைகளைச் சூடிக் களிப்பதில் வல்லவரான கவிஞர் இராசலிங்கம், சமீபத்தில் பள்ளம்புலம் முருகமூர்த்தி மீது பிள்ளைத்தமிழ் இலக்கிய மொன்றை உவந்தளித்தவர். அதேபோன்று மயிலப்புலம் கட்டுவன் வான் திருப்பொலி அருள்மிகு ஐயனார் அருட்பா மாலை என்னும் நூலினை ஆக்கியளித்துள்ளார். "**உள்ளத்துள் உண்மையொளி**

**உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்**" என்று பாரதி பாடிய தற்கிணங்க திரு.இராஜலிங்கம் அவர்களது வாக்கும், மனமும் செயல் வடிவில் விளைந்தமையினால் நாமின்று நல்லதொரு பக்தி இலக்கி யத்தைச் சுவைக்கும் பேறு பெற்றுள்ளோம்.

ஐயனார், ஐயப்பன், மணிகண்டன், சாஸ்தா, வெள்ளை யானையூர்தி என்றெல்லாம் பல்வேறு திருப்பெயர்களால் அழைக்கப்ப டும் காவல்தெய்வமான ஐயனார் வழிபாடு இந்துக்களிடையே தொன்மையான ஒன்றாகும். புராணங்கள் முதற்கொண்டு பிற்கால நூல்களிலெல்லாம் ஐயனார் வழிபாடு பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. கிராமியத் தெய்வமாக தமிழ்நாட்டின் பல ஊர்களிலெல் லாம் ஐயனார் விளங்குகின்றார். ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளுடன் ஆகம முறைசார்ந்த வழிபாடுகளும் ஐயனார் ஆல யங்களில் இடம்பெறுகின்றன. இலங்கையிலும் இவ்வாறே காவல் தெய்வமாக, வெள்ளைக்குதிரை வாகனனாக, பிரமச்சாரியாக, பூர ணை-புட்கலை என்னும் சக்திகள் இருவருடன் கூடியவராக ஐயனார் பலவிதங்களில் அருள்பாலிக்கின்றார். இந்தியாவின் கேரளநாட்டில் சிறப்புற்று விளங்கும் ஐயப்பன் வழிபாடுகளும், ஸ்ரீசபரிமலை ஆலய மும் தமிழர்கள் உட்பட இந்தியர்களிடையே கூர்மையான ஈர்ப்புடை யவை. இருமுடிகட்டிச் சபரிமலை யாத்திரை சென்று, மகரயோதி கண்டு ஐயப்ப தரிசனம் பெறும் பக்தர்கள் கோடிக்கணக்கில் இன்றும் உள்ளனர். ஐயப்பனும் ஐயனாரும் ஒருவரே என்பதற்கான ஆதாரமும் பல நூல்களின் காணப்படுகின்றன. வேற்றுமைகளில் ஒற்றுமை காட்டும் ஐயனார் வழிபாடு தொன்றுதொட்டு இடம்பெற்று வருகிறது. அனலைதீவு, காரைநகர், சுண்ணாகம், மாதம்பை, புங்குடுதீவு, திரு கோணமலை, மட்டக்களப்பு, நுவரெலியா, தம்பலகாமம் முதலான இலங்கையின் பல இடங்களிலும் ஐயனார் கோவில்கள் அமைந் துள்ளன. இப்படிப்பட்ட வழிபாட்டுத் தொடர்ச்சியிலேயே மயிலப்புலம் ஐயனார் ஆலயமும் உருவாகிற்று. கிராமமக்களின் துன்பங்களை நீக்குபவராக, ஊரை எவ்வித ஆபத்துக்களும் அணுகாமல் பாதுகாப்ப வராக மயிலப்புலம் கட்டுவன்வான் திருப்பொலி ஐயனார் அருளாட்சி புரிகிறார்.

திருப்பொலி ஐயனார் போற்றித் திருவகல், ஐயனார் பஜனைப் பாடல்கள், ஐயனார் அருள்மணி மாலை ஆகிய மூன்று பிரபந்தங்க ளையுள்ளடக்கி திரு.இராஜலிங்கம் அவர்கள் யாத்தளித்த நூலானது பக்தி இலக்கியமாக, தமிழிலக்கியமாக, வரலாற்றிலக்கியமாகப் பரிமளிக்கின்றது. காப்பு, அவையடக்கம், நூற்சிறப்பு ஆகியன உள் ளிட்ட 216 அடிகள் கொண்ட அகவற் பாவையும் உடைத்ததாக முதற் பிரபந்தம் அமைந்துள்ளது. அடுத்ததாப ஐயனார் புகழ்பரவும் பத்துப் பஜனைப் பாடல்கள் எளிய சந்தமும் சொல்லாட்சியும் கொண் டு பாடப்பட்டுள்ளன. படிக்கும் தோறும் பாடும் தோறும் உள்ளத்தை இறைவன்பால் ஈர்க்கத்தக்க சக்திவாய்ந்தவை இப்பாடல்களாகும். மூன்றாவது பிரபந்தமான அருண்மணி மாலை அறுசீர் கொண்ட எட்டடி விருத்தங்களாலான(பன்னிருசீர் விருத்தம்) பத்துப் பாடல்க

ளைக் கொண்டதாகும். உள்ளத்து உணர்வின் எழுச்சியைத் தமக்கு வாலாயமான மொழியில் இலக்கண விதிகள் பிசகாது, கேட்போரைப் பிணிக்கும் தகையவாய் எடுத்துக்கூறும் இராஜலிங்கக் கவிஞரின் கவிதா நோக்கம், புத்தி முறைகள், நோக்கத்தின் அடைவு, சமூகப் பயன்பாடு, தெய்வீக நலம், இசையின்பம் ஆகியவை ஒருசேர்ந்து வெற்றிகண்ட படைப்பிலக்கியங்களாக இம்மூன்று பாடற்றொகுப்புக ளையும் உருவாக்கியுள்ளனவெனில் அது மிகையாகாது.

**"தெற்கில் நீள்வயல் துரவுகள் வடதாய்**
**சுற்றவீற் றிருக்கும் சித்திரா போற்றி!**
**பற்றைக் காட்டுப் பசும்புல் வெளிகாண்**
**அற்றைப் பசுக்களின் அம்பா போற்றி!"**

(ஐயனார் போற்றித் திருவகவல்)

மயிலப்புலம் ஐயனாரின் அமைவிடம் பற்றிய அழகார்ந்த வரிகள் இவை. நெஞ்சின் நினைவுகளை நினைப்பு மாறாமல் சித்த ரிக்கும் கைதேர்ந்த கவிஞரின் வார்ப்புக்கள் இவையெனலாம்.

**"நீயிருந்த அன்னைமண்ணில் உன்னைவிட்டேன்-நில**
**நெருப்புவந்து சூழ்ந்ததினால் என்னைவிட்டேன்**
**தாயிருந்த தேசமண்ணில் தீயிருக்கவோ-ஐயன்**
**தங்கநிலம் தறிகெடநீ பார்த்திருப்பதோ..!"**

(ஐயனார் பஜனைப் பாடல்கள்)

அடிபட்ட மனதில் ஆழப்பதிந்துள்ள வடுக்களின் அடையா ளங்கள் இவை. சமகாலக் கவிஞரொருவரின் சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடுகள் இவை. இந்த நான்கு வரிகளும் கூட சின்ன உதார ணம்தான். இதுபோன்ற பல பாடல்கள் ஐயனாரையும் அவர் வீற்றி ருக்கும் மண்ணையும் இணைத்து, ஏங்கி, நொந்து கூறுபவைகளாகப் பஜனைப் பாடல்கள் காணப்படுகின்றன.

**பிறந்ததும் வளர்ந்ததும் பெயர்கொண்டு நடந்ததும்**
**பிணைப்புனக் கானவொன்று!**
**பெற்றவ ரோடுவந் துன்பொங்கல் படைத்ததும்**
**பெருங்கதை யானவொன்று!**
**கறந்தபால் அபிடேகக் கனியோடு தேனிட்ட**
**காட்சியும் அருளுமுண்டு!**
**கலையோடு செந்தமிழ்க் கானமும் கரகமும்**
**கவின்பெற்ற திருவுமுண்டு!**
**மறந்திடப் போகுமோ? மயிலப்பு லம்வளர்**
**மன்னவா நின்காதலே!**
**மருவுமார் துருவமும் வளநாடு கண்டாலும்**
**மாறுமோ நின்சோதியே!**
**திறம்பாட வென்மனத் தூரிகை யானநெய்த்**
**திருப்பொலிவாழ் அய்யனாரே**
**துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்**
**செண்பகத் தையனாரே!**


(ஐயனார் அருள்மணி மாலை)

ஐயனார் அருள்மணி மாலையின் முதற்பாடல் இதுவாகும். நாயக்கர் காலத்துப் புலவர்க்குச் சளைக்காத கவித்துவம். சொல்லின் வழி மனம் இழுபடச் சொக்கவைக்கும் இறைசிந்தனைகள்.

காலத்தினாற் செய்த தெய்வீகப் பணியாக இந்நூலின் வரவு அமைகிறது. தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் நன்கு அறிந்த தீவகம் வே. இராஜலிங்கம் அவர்களின் உலகம் தழுவிய தமிழ்ப்பணியாக, ஆன்மீகப்பணியாக, இலக்கியப் பணியாக இதனைக் கருத முடியும். பிறந்தநாள் தொட்டு தன்னை வழிநடத்திச் செல்லும் இறைசக்தியை வியந்து பாடிய இச்செயல் கவிஞரை என்றும் வாழ வைக்கும். கவிஞர் அவர்கள் மண்ணின் மாண்புக்குரியவர். கொடுமை கண்டு பொங்குபவர். ஏராளராக, வர்த்தகராக, எழுத்தாளராகப் பல்பரிமாணங்களில் தன்னைப் புடம்போட்டுக் கொண்டவர். 1986ஆம் ஆண்டு முதல் இறைசித்தத்தின் படி கனடா நாட்டில் வாழ்பவர். நிறைவான குடும்பப் பெருமை கொண்டவர். அவரது மயிலப்புலம் கட்டுவன்வான் திருப்பொலி ஐயனார் மீது பாடிய இம்மூன்று பிரபந்தங்களையும் உள்ளடக்கிய நூலானது மயிலப்புலம் வாழ் மக்களோடு, தீவக மக்களோடு உலகளாவிய இந்துத் தமிழரையும் பெருமைகொள்ளச் செய்யும், பயனுறச் செய்யும் என நம்புகின்றேன். அன்னாரது பணி மென்மேலும் நீடிக்க எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றேன்.

**"உள்ளத் தனைய துயர்வு"**

**கலாநிதி, சைவப்புலவர், பண்டிதர்**
**செ.திருநாவுக்கரசு.**
**(ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர்)**



# இது ஒரு வாய்முறைப்பாடு!

## -தீவகம் வே. இராசலிங்கம்-

பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத் தமிழ் பாடியதின் பின்னால், பாடியவர் பற்றிய ஒரு ஆய்வு மக்களிடையே காணப்படுகிறது. அந்த வகையில் என் கவிதை வாய்ப்பின் ஆரம்பமும் இன்றைய பிள்ளைத் தமிழின் வருகைக்கும் இடையில் ஒரு கால் நூற்றாண்டு கால இடைவெளியில் நான் காணாமற் போயுள்ளேன் என்பதற்கான நிலை உங்களின் சிந்தனையின் பாற்பட்டு நிற்பது எனக்குத் தெறிக்கிறது.

அதன் வாய்ப்பாடே இந்த வாய் முறைப்பாடு.

காற்றின் கந்தகநெடி என் வாயூறி வயிற்றில் நிறைந்தபோது என்மண்ணின் சேற்று வயலை விட்டுச் செல்ல யோசித்தேன்.

புறப்பட்டது முதல் வந்து சேர்ந்தது வரையான ஒரு வரைபடம் குறைந்த பட்சம் என் சாம்பலுடனாவது 'கூடவரும்.

கணீரென்று ஒலிக்கும் கந்தன் மணி எவ்வளவு தூரம் செல்கிறது என்பதனைக் கேட்க, ஒன்றரை மைலுக்கும் அப்பாலும் நின்று என்காதைத் திருகிப் பெற்றிருக்கின்றேன்.

விடிவெள்ளி தெரிந்தாலும் கருமலையாகத் தெரியும் ஐயனார் ஆலமர நிழலை வீட்டு வாசலில் நின்று காலை வணக்கம் செய்திருக்கிறேன்.

எனக்குக் கிடைத்த முதற்கவியை..**"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா.."** என என்தாய்தான் தந்தாள்..!

பட்டத்தை பேரிற் சுமக்க முடியாமல் விட்டுப் போனது கல்வியென்றாலும் என்னை விட்டுப் போகாததும் கல்விதான்.

"நீவா.. என் பிள்ளையாக.. உன்னை இந்தியாவில் கற்க வைப்பேன்..காசு பணம் ஒன்றும் யோசியாமல் வா என.. பாடசாலையில் என்தமிழைக் கண்டு பணிந்தழைத்தவர் வேலணை மத்திய கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர் மட்டுவில், நுணாவில் வடக்கு ஆ.நடராசா ஆசிரியர்.

பாடசாலை முடிந்து வெளியே வரும்போதெல்லாம், கல்லூரி முன்னுள்ள சைவம்கடை வாசலில் தன்பிள்ளையைப் பார்க்க நிற்கும் ஒரு தந்தையினைப்போல் என்னைப் பார்க்க நிற்பார்.

விஞ்ஞானம் என் மெஞ்ஞானத்தை விழுங்க மறுத்ததால் அந்தப் புண்ணியவாளனை நோக வைத்தேன்.

என்னை எனக்குள் இருப்பதை எனக்குத் தெரியாத போது தனக்குள் கணக்குப் போட்டார் அந்தத் தமிழ் ஏந்தல்.

அவரின் அழைப்புத் தோற்றுப் போனபோது, சுவரில் இடிப்பதற்குப் போதுமான சோதனை என் வாழ்வியலை முத்தமிட்டது.

என் உடன்பிறந்த அண்ணன், அரசாங்க அச்சகத்தில் இலிகிதனாய் இருந்தபோது, காணாமல் போனான்! (1967 ஆவணி.)

படிப்புகளுக்கு முழுக்குப்போட்டு, இழுக்குப் படிந்த அவரது நண்பர்களிடமிருந்து மீட்கக் கொழும்பு சென்றேன்.

ஆனாலும், அவன் மறைவு அவனது நண்பர்களது எட்டுக் கரங்களுக்குள் அகப்பட்டு இறந்துள்ளான் என்பது இப்பொழுது என் முடிவாக இருக்கிறது.

ஆகமொத்தம் ஏன் இதை எழுதுகிறேன் என்றால், பள்ளம்புல முருகன் பிள்ளைத்தமிழ் வெளிவந்த பிறகு எப்படி இவன் எழுதினான் என்பதும், இவனுள் மறைந்து இத்தனை நாட்கள்வரை எங்கு மறைந் திருந்தது இவனது எழுத்தாற்றல் என்பதும் ஒரு கேள்வியாக என்ச முதாயத்துட் தொக்கிநின்று கேள்விக் கணையாகி வருகிறது.

ஏறக்குறைய நூறு பாடல்களுக்குத் தந்தையாகத்தான் கனடா வந்தேன்.

ஆனாலும் அதைத் தெரிந்தவர்கள் சிலரும், தெரியாதவர்கள் பலருமாக இருந்தார்கள்.

தில்லைநாதப் புலவர் மணிவிழாவிற்குக் கவிஞர் தில்லைச் சிவன் என்னை மேடை ஏறவைத்தார்.

வயது பதினாறு அல்லது பதினேழாக இருக்கும் பொழுது அந்த வெண்ணுடைப் புலவனை மேடையில் பாடினேன்.

**"பள்ளம் புலம்வதியும் வள்ளிக் கணவனவர்**
**உள்ளத்தில் நிறைந்தானடி-கிளியே**
**உள்ளத்தில் நிறைந்தானடி!**
**வெள்ளம் எனக்கொடுக்க விண்ணார் தமிழ்க்கவியில்**
**வேலன் இருந்தானடி-கிளியே**
**வேலன் இருந்தானடி"** என்ற அந்தப் பாடலால்
எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

குறைந்தபட்சம் என் முதற்கவியே அதுவாக இருக்குமோ என இப்பொழுது அதிகம் சிந்திக்கின்றேன்.

தீண்டாமை என்பார்வையில் ஒரு பதைப்பாகப் பார்த்திருக்கி றேன்.

தீண்டாமை மற்றும் அம்மா என்ற தலைப்பில் இரண்டு கவி தைகள் கவிஞர் தில்லைச்சிவன் மூலம் தாய்நாடு வீரசிங்கம் அவர் களிடம் நேரிடையாகக் கொடுக்கப்பட்டு வெளிவந்தன.

கவிதையும், முருகன் தொண்டும் என்னை என் திருமணத் திற்காக அறிமுகம் செய்தன. இது1968இல் நடந்தது.

அவ்வருடம் ஆவணிக்குப்பின் ஒருநாள் இரவு 1:30 மணிய ளவில் தில்லைச்சிவன் அவர்களும், மகாலிங்கம் ஆசிரியர் அவர்க ளும் என்வீடு வந்து சம்மதமா எனக் கேட்டார்கள்.

என்வயதை நீண்டநேரம் யோசித்து அவர்கள் முடிவெடுத்தபின் தடைசொல்ல என்னுள் தடயம் எதுவும் இருக்கவில்லை.

என் முதற் தலைத் தீபாவளி.

ஈழநாடு பிரசுரித்த அவள் கவிதையுடன் வீடு சென்றேன்.

**முத்து இளநகை எத்திவர-ஒரு**
**மோகன குஞ்சரிபோல் நடந்து-மிக**
**மெத்தச் சிறுத்த இடைவளைவில்-எழில்**
**மின்னென மண்டபம் இடும்மயிலே-உன்**

பத்தரை மாத்து மேனிப்பரப்பிலே-வெளிப்
பகட்டுப் புடவையும் கொஞ்சுவதோ?-அடி
சித்திரக் கைத்தறிச் சேலையடி-காதற்
சேயிழையே என்தன் அன்பளிப்பு!

சேலையுடுத்து நீ லாவகமாய்-சரி
செய்து கொய்யகம் முன்னிருத்தி-வான்
கோல முகிலில் அம்பிறைபோல்-குழல்
கோதி மல்லிகை மலர்நிறைத்து-கொடும்
காலச் சுவட்டினில் தீவினை போவென –ஒளி
காட்டித் தேவன் திலகமிட்டு-எழில்
வாலைக் குமரியாய் வாசலிலே-நடை
வந்து பயிலடி நான்வருவேன்!"

என்ற கவிதையோடு ஈழநாடும் சுமந்து என் மனையாள் வீடு சென்றேன். வயது இருபத்தியொன்று. அவளுக்குவயது பத்தொன்பது.

வாழ்வு இனிமையானதாகத் படிந்தது. என்பெற்றோர், சகோதரி, சுற்றம் அனைவரும் மகிழ்வு பெற்றார்கள்.

நான்கு பிள்ளைகள். மூன்றாவது பிள்ளை என் இரண்டாவது மகன். பெயர் பார்த்திபன். இரண்டாவது பிறந்த நாளுக்கு இரண்டு நாள் இருக்கையில் என்னைவிட்டு அகாலமாகப் பிரிந்தான்.

அவன் பிரிவு என்னை வாட்டியது. அவனை நினைந்த பாடல் இருபத்திநான்கைக் கொண்ட புத்தகமாக வெளிவந்தது.

"நான்அமைத்த மாளிகையில் நல்விளக்காய் இருந்தவனே
தேன்சொரியும் மலரினிலே தேனாக இருந்தவனே!
வான்குடும்ப வீதியிலே வண்ணநிலாப் போன்றவனே!
கூன்விழுந்த தென்வாழ்வு கும்மிருட்டு என்னில்லம்!

ஆடிவரும் தேரழகை அமுதம்தரும் தேன்மழலை
கோடிகோடி யாய்க்கதைகள் கொட்டிவைத்த பேரழகை
மூடிவைத்துத் திருமகனே முடித்தகதை உன்னப்பன்
பாடிவைத்துப் பார்ப்பதற்கா பார்த்திபனே சென்றனைநீ"

இப்படியாக இருபத்திநான்கு பாடல்கள்.

இதைவிட நல்லூர்த் தேருக்காக ஒரு பாடல் அதுவும். ஈழநாடு பிரசுரித்தது.

"மங்கலச் சங்கொலி மத்தள நாதம்
மாதவ அந்தணர் மந்திர கீதம்
பொங்கிடப் பொற்கரம் வேலினை ஏந்தி
பூம்புகல் நல்லையில் பொன்மயில் ஏறும்
திங்கள் வனப்புயல் சேல்மொழி மாது
தேமொழி வள்ளியின் திருமண வாளா
கொங்கலர் பூச்சரம் சூடிய கோலம்
கோடிட நான்மணித் தேரின் வருவாய்! "

இவைகளெல்லாம் ஏன் எழுதுகிறேன் என்றால், என் உள்ளக்

கிடக்கைகள் யாவும் அரசியல், வாழ்வு, மொழி என அனைத்தும் கவிதையாக மலர்ந்தன. அவ்வளவும் எண்பதுகளுக்கு முன்னே என்பதுதான். அதற்குப் பின்னேயும் எழுதினேன். இந்திரா காந்தி மறைவுக்கு ஒரு கவிதை. பத்துக்கு மேற்பட்ட கவியரங்குகள். அவ்வளவும் அங்கங்கே சிலரின் பார்வைக்குள் நான் தெரிந்து நின்றேன். அவைகளை எல்லாம் எழுதி இந்தப் புத்தகத்தின் நோக்கத்தை எனக்காகப் புகுத்த யான் விரும்பவில்லை.

ஆனாலும், இவை எல்லாம் எந்தப் பாவடிவமும் கற்றதினால் வந்ததில்லை. ஆங்கிலப் பாடமுறை மாணவன் என்பதால் ரொறன் ரோவில் நாற்பது வயதில் ஒரு மாணவனாகத் தொடர்ந்தேன்.

கணினியில் மனமாரக் கவிதை நிறைந்தன. ஒரு பத்தாயிரம் பாடல்கள் என்றால் பாருங்கள். ஐநூறு தலையங்கங்கள். தலையங்கத்தை வைத்தே என்னைத் தேரும் முகங்கள். ஆகமொத்தம் இவை எல்லாம் என்னோடு உறங்கின.

இப்பொழுது ஊரும் உறவுகளும் வாழும் கடவுளரும் எனக்குள் வலம் வருகிறார்கள். கவிதை இலக்கணத்தை தமிழ் எழுத்தாளர் இணையம் வழங்கிய வகுப்புக்களில் பண்டிதர் அலெக்ஷாந்தர் அவர்களிடம் கற்றதினால் தெளிவு கொண்டேன்.

திருமுருகன் பிள்ளைத் தமிழும், அய்யனார் அருள்மணி மாலையும் இலக்கண மரபு தெரிந்து கொண்டே எழுதினேன். பிழைகள் அற்ற பாடல்கள் எனக்கூற என்னால் முடியாது. ஆனாலும் எங்கள் கடவுளர்களும், நீர் குவியும் வயல்களும், தோட்டம் துரவுகளும் இந்தப் பாடல்களில் நிறைந்து இருக்கின்றன என்பதை மட்டும் என்னால் கூறமுடியும். ஏனெனில் நான் பார்த்துக் கேட்டு வந்தவை யாவுமே இவையாகி என்னுள் இருந்தே வந்திருக்கின்றன.

**அய்யனார் அருள்மணி மாலை ஒரு இதயம் வரிக்கும் பிரபந்தத் திரட்டு என பேராசிரியர் செ. திருநாவுக்கரசு அவர்கள் முன்மொழிந்திருக்கின்றார். புகழ்ந்திருக்கின்றார். அந்தப் பேறு என் வாழ்நாட் பேறாகும்.**

பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழைப் பார்த்து அச்சிட்டவர் என்பதனாலும், இன்று மயிலப்புலம் திருப்பொலி ஐயனார் கோவிலோடும் பணிபுரிகின்ற பல உள்ளங்களில் ஒன்றாக இருப்பதினாலும் இந்த அருட்பாமாலைக்கு முதலில் அழைத்தவர் விகடன் அச்சக உரிமையாளர் சி.தயாபரன் அவர்கள்.

பிரான்சில் இருந்து ஓய்வுறக்கமின்றி எங்கள் கடவுள்களின் உள்ளக் கிடக்கையாக இருந்து பணிபுரியும் திரு.செ.கந்தசாமி(குணம்-தபாலதிபர்) அவர்களது அரும் பணியாலும், இந்நூலின் மூன்று பிரபந்தங்களில் ஒன்றான ஐயனார் பஜனைப் பாடல்கள் ஒலித்தட்டு வடிவாக வருவதற்கும் முதுகெலும்பாக இருக்கின்ற காரணிகள் திருப்பொலி ஐயனாரின் அருட்பேரிகை ஆகும்.

இதன் எழுத்துமுறை ஆசிரியராக நான் இருப்பதினால், பணிவாக உங்களிடம் ஒரு விண்ணப்பம்.

நான் முற்றும் துறந்த முனிவனாக இல்லாதவன். பற்றறுந்

தோர் படிநிறையும் பரந்தாமன் குடிநிழலும் இல்லாதவன். இந்த நூற்களின் உள்ளே கண்பார்வையிலும், கர்ண பரம்பரை முன்னோர் கதைத்தவையும், கண்முன் பனித்த கடவுளரும், எங்கள் ஊரும் ஊறணியும் அல்லாமல் வேறொன்றும் இல்லை.

சிறுகத் தோன்றிய சிற்றுள்ளம், அவ்வப்போது அடிதழுவி, மழையில் நனைந்து, வெய்யிலில் வதங்கி, கோயில் மணியோடும் குடில் பரப்பி வந்தவன் கோர்த்தவை எனக் கொள்ளுங்கள்.

ஊரோடும் உறவோடும் வாரோடும் நிலத்தோடும் என் வாழ்வியலையும் வண்ணக் கவிதையினையும் பதிவு செய்திருக்கிறேன் என நீங்கள் நினைத்தால் எனக்கு அதுவே போதும்.

**“இறையும் தமிழும் மறையின் ஊற்றே”**

**அன்புடன், உங்கள் உறவு**
**தீவகம் வே. இராசலிங்கம்-கனடா.**



# வெளியீட்டுரை!

தீந்தமிழ்ப் பாவலர் தீவகம் வே. இராசலிங்கம்.

ஊர் நிகழ்வுகளின் ஒவ்வொன்றிலும் நானும், வீ.ஆர் என்று எங்களால் அழைக்கப்பட்ட நண்பன் தீவகம் வே. இராசலிங்கம் அவர் களும் இணைந்து பயணித்த நிகழ்வுகள் என்றும் பசுமையானவை. மாணவர் அணியென என ஐயனார் ஆலயத்தோடு ஒருங்கமைந்த திருவிழா ஊரின் பெருவிழாவாக உருவெடுத்திருந்த சமயம் எங்கள் பணி ஒரு இளைஞர் சமூகப் பணியாக மாறியிருந்தது.

பொங்கலும் புகழ்பூத்த கலைநிகழ்வுகளுமாக எழுந்துநின்ற எங்கள் மண்ணின் ஐயனார் ஆலயத் திருவிழா சிறந்து நின்ற காலத் தில், இறைபணியும், சமூகப் பணியுமாக இளைஞரை ஒன்று சேர்த்த ஆசிரியர் திரு.ச. மகாலிங்கம் அவர்களின் முயற்சியில் நடந்த நெறி யாற்றலில் நாங்கள் இருவீரும் பணியாற்றும் பேறு பெற்றோம்.

இளம் வயதிலேயே கவியாற்றல் பெற்றுத் திகழ்ந்தவர் நண்பன் தீவகம். வே. இராசலிங்கம் என்பது எங்கள் சமகாலத்துக் காட்சிகள்.

தில்லைச்சிவன் எழுதிய வேலணைப் புலவர்கள் வரலாறு என்ற நூலில் இவரும் பெயரும் அடங்குகிறது. சைவம் கொழிக்கும் தீவகமும் கிறிஸ்தவ ஆயர்களும், விருந்தோம்பல் பண்பில் சிறப்புப் பொருந்திக் கனிந்த நிலத்திற்காக தன் பெயருக்கு முன்னால் தீவகம் எனக் குறிப்பட்டு பெருமை சேர்த்தார்.

தில்லைநாதப் புலவர் மணிவிழா நடந்தேறிய போது, ஊர் மக் களிடையே தன் சிறுவயதில் தான் ஒரு சிறந்த கவிஞன் என நிரூ பித்தார். பத்திரிகைகளில் இவரது கவிதைகள் மலர்ந்து சிறப்புச் செய்தன. கூட்டுப் பிரார்த்தனை சபையில் பங்குபற்றிச் சிறப்புச் செய்த மாணவர்களில் நாம் இருவரும் சமகாலத்தவர்கள் ஆகும்.

பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழ் இன்று ஒரு சிறப்பு பக்தி இலக்கியமாக பேசப்படுகின்ற நேரம், எங்கள் வேண்டுகோ ளுக்கு இணங்க மட்டுமல்லாமல் அவர் நினைவிலும் குடிகொண்டி ருந்த எண்ணத்தின் வடிவாக மயிலப்புலம், கட்டுவன்வான், திருப்பொ லி ஐயனார் அருட்பாமாலை என்னும் இந்நூல், அழகுறக் கோவில் அமைந்து குடமுழுக்கு நடைபெறும் ஐயனார் ஆலயப் பெருவிழாவின் மத்தியில் வெளிவருகிறது.

இந்நூலில் இரண்டாவது பிரபந்தமாக அமைந்த பஜனைப் பாடல்கள் இசையொலி நாடாவாக அமையப்பெற்றுச் சிறப்புப் பெறு கிறது. இந்த இசையொலித் தட்டிற்கு உழைத்தவர் அனைவர்க்கும் நன்றி சொல்லி, அழகிய செஞ்சொல்லில் எழுதித்தந்த தீந்தமிழ்க் கவிராயர் தீவகம் வே. இராசலிங்கம் அவர்களுக்கும் நன்றி கூறி, நாளைய நாளில் எங்கள் நட்பு ஒரு இலக்கியப் பணியாக சிறப்புப் பெறும் என்று கூறி, அவரது பணி மேலும் சிறந்து ஓங்க எங்கள் எல் லாம் வல்ல ஐயனார் அருட்கடவுளை வேண்டுகின்றேன்.

செ.கந்தசாமி (குணம்-P.M.)

**சோழாவத்தை-பள்ளம்புலம் மக்கள் ஒன்றியம்-பிரான்ஸ்**

# திருப்பொலி ஐயனார் போற்றித் திருவகவல்!

**விநாயகர் காப்பு!**

கட்டுவன்வா னையனார் காப்புப் பெருங்கதையைத்
தொட்டு முரசாக்கித் தூரலிட-பட்டுப்
பனியுலகுந் தோன்றியருள் பாலிக்கும் பிள்ளைக்
கனியமுதத் தைங்கரனே காப்பு!

**அவையடக்கம்!**

காவில் இருந்துலவிக் காக்கும் அரிகரர்க்குப்
பாவில் மருங்கிசைத்துப் பண்ணார்க்கும்-ஆவற்
பதிப்புலமே ஈது! பசும்புலமை இல்லான்
நொதிப்பென்று கொள்ளாதீர் நுண்!

பாடற் பொழுதும் படும்துயரின் மீக்கோடும்
வாடற் சருகாய் வளையவருங்-கூடற்
புலத்தா னொருவன் பெருந்துருவஞ் சார்ந்தும்
நிலத்தைப் பணிந்தான் நினை!

**நூற்சிறப்பு!**

சேவிப் பவர்க்குச் சிறப்பீவார் தொண்டாக்கிக்
கூவிப் பவர்க்குக் கொடைசெய்வார்-பாவிதனால்
சஞ்சார மாயுறையைச் சாயுச்யம் சேரிட்டு
அஞ்சேல் எனவருவான் ஐயன்!
***சாயுச்யம்-ஆன்மா கடவுளொடும் ஐக்கியமாகும் நிலை**

சித்திரைப் பௌர்ணமிச் செப்பார் திருநாளில்
முத்திவ் வகவல் மெருகார-வைத்து
இசையில் வடித்து இயங்குவார்க் கென்றும்
மிசையாகும் ஐயன் விருப்பு!

**நூல்!**

தீவகத் தாயின் திருப்பொலிப் பதியில்
மேவி அருள்செயும் மெய்யே போற்றி!
ஈழத் திலங்கை இருக்கும் வடபால்
ஆழப் புனல்மண் அகத்தாய் போற்றி!
யாழாம் புண்ணிய யாப்பின் மரபில்
வேழமாய் நின்ற வித்துவா போற்றி!
தமிழொடு பூக்குந் தார்மிகந் ததும்ப
அமிழ்தெனப் பூக்கும் ஐயனே போற்றி!

உயிர்க்குப் பவவினை ஒடுக்கும் அற்புத
மயிலப் புலம்வாழ் மன்னவா போற்றி!
போவோர் வருவோர் புகலுளார் தரிக்குந்
தேவநற் செறிகழற் தீபா போற்றி!
எழில்மா காளை இழுக்கும் வண்டிகள்
வழிபா டியற்றும் மாண்புளாய் போற்றி!
பேரிருள் மாட்டுப் பேய்களைத் துரத்தி
ஊரினைக் காக்கும் ஓம்பவா போற்றி!
பூரணை புட்கலை பெய்வளை யாருடன்
ஆரருள் பொழியும் அச்சுதா போற்றி!
கிளுவையிற் தோன்றிக் கூடாய் ஆல்மரம்
தளுக்கவீற் றிருந்த தாட்சண்யா போற்றி!
கற்பூ ரத்தொடுங் கண்டிட எரிந்து
அற்புதம் கொடுத்த அஞ்சுகா போற்றி!
தெற்கில் நீள்வயல் துரவுகள் வடதாய்
சுற்றவீற் றிருக்கும் சித்திரா போற்றி!
பற்றைக் காட்டுப் பசும்புல் வெளிகாண்
அற்றைப் பசுக்களின் அம்பா போற்றி!
காவலிற் காவலாய் காத்து ஊர்மனைச்
சேவகன் ஆகிய சேந்தனே போற்றி!
பொன்போல் விளையும் பூமிப் பயிர்கள்
நன்செய் மருத்துவ நம்பியே போற்றி!
திண்தோள் காவுந் தூருமண் வெட்டி
கொண்டோர்க் குதவுங் குருவே போற்றி!
நெற்றியில் நீறும் நினைந்துள வீறும்
பற்றிய சீலரின் பக்தனே போற்றி!
சிவனார் அருளுந் திசைகரன் பொறியும்
தவமாய்க் கொள்ளும் தத்துவா போற்றி!
நன்மைக் கனிவாய் நவின்றிடா மாந்தர்க்கும்
அன்பையே பெருக்கும் அமுதா போற்றி!
இன்மய ராயினும் இறைத்துறை சாருஞ்
சின்மயர்க் குதவுஞ் சிவகரி போற்றி!
நன்மை புரியார் நலமிலார் திருத்தித்
தின்மைத் தீயரைத் தீய்ப்பவா போற்றி!
சித்திர குப்தன் திருத்துறைப் புராணம்
கொத்தும் உரையுங் கேட்பவா போற்றி!
சித்திரைக் கஞ்சியிற் செறிந்த மக்களைச்
சத்துடன் நிமிர்த்தும் சம்யுகா போற்றி!
தைப்பாற் பொங்கல் தாங்கிய விழாவில்
உப்பரி யூர்ந்து ஒளிர்பவா போற்றி!
வயல்நெல் குவித்த வாறாய் அவிசிற்
றயலொடும் களிக்கும் அம்புஜா போற்றி!
பால்பழம் வெற்றிலை பாக்கொடு படையல்

ஆல்மரம் காண அருள்பவா போற்றி!
பொந்தொடு ஆலிற் பொங்குபாற் சுளையெலாம்
சிந்திட உண்ணுஞ் சுகுணா போற்றி!
மைந்தர்கள் வந்து மாநிழல் கற்கச்
சிந்தெனுந் தமிழைச் சேர்ப்பவா போற்றி!
அந்திப் பொழுதில் ஆநெய் விளக்கில்
சிந்துபே ரொளியின் சோதியே போற்றி!
அய்யக் கலம்பகம் அணியுலாச் சந்தம்
செய்யக் கிடைத்த செண்பகா போற்றி!
வேட்டைத் திருவிழா வெளிக்கிட் டூர்ந்து
பாட்டும் பசனையும் படைப்பவா போற்றி!
வீடு வாசல்கள் வெளிவலம் பற்றித்
தேடி உலாவருந் தெய்வமே போற்றி!
செம்பவ ளத்துறைச் சீர்மலி கின்றநற்
கும்பமந் திரத்துக் கோமகா போற்றி!
பனுவலும் பொழிப்பும் பகரநற் பூசையும்
மனுமுகம் பார்க்கும் மகேசா போற்றி!
கலையும் கூத்துங் கருத்தும் இசையும்
நிலைபெற் றுயர்ந்த நித்தியா போற்றி!
கரகம் மத்தளம் கம்பதீ யாடிடும்
நிரைக்குள் மகிழ்ந்திடும் நீதனே போற்றி!
ஆதன விளைச்சலும் அகல்நீர் வளமும்
சோதனைச் சித்தியும் சேர்ப்பவா போற்றி!
பாவம் பொடிபட பரிகர ணங்கள்
நீவத் தழிக்கும் நித்தியா போற்றி!
கட்டுவன் பாய்ந்து கரையுடைத் தோட
தொட்டுன் மருங்கிடுந் தோத்திரா போற்றி!
மயிலஅம் புலமாய் மகிழ ஊர்ந்திடுங்
குயிலாய் ஒலிக்கும் கூத்தா போற்றி!
தயிரும் நெய்யுந் தந்த பூமியின்
பயிராய் நின்ற பார்த்தனே போற்றி!
வேந்தனார் கற்ற விழுதாற் கோவிற்
காந்தனாய் இருந்த கற்பகா போற்றி!
ஆனிஅ மாவாசை யதற்குமுன் சதுர்த்தி
தேனிற் பொங்குநாள் தேர்ந்தவா போற்றி!
நேர்த்தி வைத்து நிசத்தொடும் ஆக்கச்
சேர்ப்பார் திரளும் திருமுகா போற்றி!
அய்யங் கொடுத்து அகத்தொடும் மாந்தி
மெய்வந் துறைய விஞ்சுவாய் போற்றி!
காக்க காக்க கடும்பேய் உருட்டி
மீக்குறச் செய்யும் மேதகா போற்றி!
நாதஞ் செறிந்த நாதத்துள் நாதமாய்
கீதஞ் செறிந்த கீர்த்திகா போற்றி!

திரிகர ணத்துள் தீய்ந்த உளமொடும்
புரிகர ணஞ்செய் போதகா போற்றி!
நன்னியர் பின்னே நவிர்பல் லோரொடும்
பின்னிய ஆலயப் புகலுளாய் போற்றி!
வேலுப் பிள்ளை விளங்குகெங் காதரன்
சாலிடஞ் செய்யச் சார்ந்தவா போற்றி!
நோய்வந் தெற்றினும் நுவன்றிடத் துன்பம்
பாய்வந் துளலினும் பார்ப்பவா போற்றி!
அவுணன் பரசுனை அழிப்பதற் கென்றே
நிபுணத் தோன்றலாம் நிமலா போற்றி!
ஐயனார் தோன்றி அருட்பலம் மேப்படும்
ஐயப்பன் ஆகிய அப்பா போற்றி!
தோன்றலர் பொய்கைத் துட்பொருள் ஆகித்
தான்தோன் றியாகிடும் தம்பிரா போற்றி!
ஆன்ற மலங்கள் அழித்து நவையிலாத்
தோன்றல் ஆக்கிடும் தீட்சிகா போற்றி!
ஈன்ற விளக்கொடு இருளிலே வந்து
ஊன்றும் மனைவழி உலவுவாய் போற்றி!
நேர்வழிப் பின்தெரு நிசவழி நினைப்போர்
ஊர்வழி அபயம் ஓம்புவாய் போற்றி!
உத்தம மகளிர் உலாவந் தேற்ற
நித்தமும் ஒளிதரும் நேர்முகா போற்றி!
துரவிலே நின்று துலாமிதிப் போரை
அரவம் பேய்படா(து) தணைப்பாய் போற்றி!
கற்பனை கனல்மொழி கணிதம் ஆக்கிட
அற்புதம் செய்யும் ஐயனே போற்றி!
அம்பா இம்பா உம்பா நம்பா
எம்பா வென்கும் எம்பிரா போற்றி!
கும்பத் தெய்வநீர் கோமமாய் ஆக்கியெம்
செம்புலம் பரப்புந் தீர்த்தா போற்றி!
மாணவ மணிகள் மடைதிறந் தாற்றும்
பேணவா விழாவின் பிதாமகா போற்றி!
தில்லைச் சிவனார் தீரா வேட்கைக்
கல்லையிற் றூஞ்சல் காண்பவா போற்றி!
தில்லை நாதத் தீம்புலப் புலவன்
முல்லைத் தமிழில் முகிழ்ப்பவா போற்றி!
தேன்கவி முகிலன் தீரா துழன்றும்
வான்கவி பாட வைத்தவா போற்றி
பண்டிதர் பாவலர் பாமரர் ஏற்றத்
தண்தமிழ் தந்த தம்பிரா போற்றி!
விடியதி காலை வெள்ளி முளையிட
நெடியதாய் ஆல்தரும் நிழலே போற்றி!
பச்சைக் கிளிகள் பவளவாய் மைனா

உச்சியிற் பறக்க உலங்குவாய் போற்றி!
கொம்பரில் ஓடுங் குஞ்சான் அணில்கள்
உம்பர் ஆக்கிய ஓங்கரா போற்றி!
திரிகரணம் நீக்கித் தீர்த்து மும்மலப்
பரிகரணம் காட்டும் பரமா போற்றி!
கன்னியர் காளையர் காந்தத் திருநிலம்
முன்னகக் காவல் முதல்வனே போற்றி!
திருவுலாப் போந்து தூயேழ் மடவார்
உருகும் மனவெளி ஊற்றே போற்றி!
பூரணை புட்கலை பெய்வளைத் தெய்வார்
ஆரணங் கோடுறும் அலங்காரா போற்றி!
பேரலை வார்கடல் புக்குவாய் காக்குங்
காரலை மைந்தக் கடற்கோ போற்றி!
கந்தகத் தீயில் கருகிடா நின்ற
அந்தமிற் கோவில் அச்சுதா போற்றி!
ஆத்தி சூடி அன்னவொன் றியத்தால்
ஏத்திடும் கோவில் ஏரொளி போற்றி!
கண்டதுங் கனிந்ததும் விண்டதும் நோக்க
விண்டிறல் தந்த வியாபகா போற்றி!
மண்கும் பாரிள நீரொடுங் குளித்து
எண்திறல் முழுக்கு இடுபவா போற்றி!
கதலி வாழைநற் கனிமாப் பலாவும்
அதர்வினாய்ப் படைக்க ஆள்பவா போற்றி!
நான்மறை வேதம் நவின்றமந் திரங்கள்
பான்ஒளிப் பூட்டும் பஞ்சரா போற்றி!
பால்முழுக் காடிப் பஞ்சா மிர்தத்
தால்நனைந் தூறும் தாட்சண்யா போற்றி!
மயல்உறு மாந்தர் மனவெளி புகுந்து
கயல்எனப் பாயுங் கருத்தனே போற்றி!
பாடிய பாட்டும் ஏடிடும் கலையுஞ்
சூடிடக் கனிந்த தேவா போற்றி!
அத்துவா காட்டிப் பித்துளம் போக்கித்
தத்துவம் காட்டுந் தங்கனே போற்றி!
ஊனிற் பெருவலிக் குள்ளொளி காட்டி
தேனிற் பிறவி துய்ப்பவா போற்றி!
சித்திர புத்திரன் திருக்கதை இயம்ப
முத்தியைக் காட்டும் மேலவா போற்றி!
பெருங்கதை பாட விரிவுரை கூற
மருங்குலார் கேட்க வைத்தவா போற்றி!
வான்இறைத் தேவ வண்ணமுங் காட்டி
நான்அகங் காரம் நத்துவாய் போற்றி!
முன்னர் வினையும் மூடிய வினையும்
நன்னெறி யாக்கி நல்குவாய் போற்றி!

ஆனியிற் றலைக்கும் அலையென மக்கள்
பானையிற் பொங்கும் பரிமளா போற்றி!
அடைக்கலங் காத்த அய்யனா ராகிப்
படைக்கலம் வைத்த பகலவா போற்றி!
கறுப்பு ஐயனார் கானவீ ரப்பராய்
நொறுக்கிடும் சேனை நிலமுளாய் போற்றி!
சாஸ்தா என்கச் சபரி யூர்ந்தவர்
ஆஸ்தா னத்து அம்புஜா போற்றி!
உலகுக்கு முந்திய ஓர்நூற் றாண்டிலும்
புலவு காத்தநற் பிரணவா போற்றி!
பேய்கள் சூனியம் புதர்கள் அண்டிய
நோய்களும் நீக்கி நூர்ப்பவா போற்றி!
ஆர்க்கா டுறையூர் அருஞ்சொல் ஐயனார்
கூர்க்கல் வெட்டுக் கூத்தனே போற்றி!
ஐயா என்றும் அய்யனே என்றும்
கைவாள் கொண்டு காப்பவா போற்றி!
குதிரைமா ஏறிக் கொம்பருட் புகுந்து
அதிருமண் காத்த அடற்பரி போற்றி!
அடைக்கலங் காத்த அய்யனார் என்கப்
படைக்கலங் கொண்ட பார்த்திபா போற்றி!
வெள்ளைக் குதிரை வீரனாய்ச் சுற்றிக்
கள்ளரைத் துரத்துங் கருத்தா போற்றி!
சேவகப் பெருமாள் செய்யனார் என்குங்
காவகம் செய்த காப்பியா போற்றி!
திருப்பொலி வீரா தெய்வப் புலவா
இருப்பிலே கட்டுவ னிருப்பே போற்றி!
மயிலப் புலத்தும் மண்வளப் பள்ளம்
பயிர்ப்புல வனமார் பாலகா போற்றி!
கெங்கா தரனின் கீழ்நிலம் ஆகிபின்
பங்காய் மக்களைப் படர்ந்தவா போற்றி!
ஏற்பார் நூற்பார் ஆர்ப்பார் காப்பார்
நோற்பார் போற்றிடும் நித்தியா போற்றி!
ஐயனார்த் தோன்றல் ஐயப்ப னாகி
மையலாய் மாறிய மணிகண்டா போற்றி!
சாதா போற்றி! சம்யுகா போற்றி!
போதார்ப் பொலிவே போற்றி போற்றி!

**(ஐயனார் போற்றித் திருவகவல் முற்றிற்று)**

# மயிலப்புலம் கட்டுவன்வான் திருப்பொலி ஐயனார் பஜனைப் பாடல்கள்!

(01)

## ஓடிவா ஓடிவா அய்யனாரே

உள்ளம் இனிக்குதடா ஐயனாரே!-எங்கள்
ஊரும் களிக்குதடா ஐயனாரே!
வெள்ளைக் குதிரையுடன் ஐயனாரே!-உன்றன்
வெளிச்சம் வருகுதடா ஐயனாரே! -உள்ளம்

பார்க்கும் இடங்களெல்லாம் ஐயனாரே-உந்தன்
பாதம் தெரியுதடா ஐயனாரே!
வேர்க்குள் உதித்துவந்த ஐயனாரே-உன்றன்
விருட்சம் தழைக்குதடா ஐயனாரே! ! -உள்ளம்

கற்பூரச் சோதியிலே ஐயனாரே-உன்னைக்
கண்டமனம் சிலிர்க்குதடா ஐயனாரே!
அற்புதத் திருப்பொலியில் ஐயனாரே-உன்றன்
அலங்காரம் ஜொலிக்குதடா ஐயனாரே! ! -உள்ளம்

ஓடிவா ஓடிவா அய்யனாரே-உனக்கு
ஊர்சிறக்கப் பொங்கலுண்டு அய்யனாரே!
கூடிவந்தார் பாடிவந்தார் அய்யனாரே-உன்றன்
கூட்டமொன்று சேர்ந்ததடா அய்யனாரே! -உள்ளம்

காண மனமினிக்கும் அய்யனாரே!-உன்றன்
காட்சி தெரியுதடா அய்யனாரே!
வாண வெளிச்சமொடு அய்யனாரே-நீ
வந்தருளைத் தந்துவிடு அய்யனாரே! ! -உள்ளம்

(02)

## ஓடிவா ஓடிவா அய்யனாரே ஓடிவா!

பூரணை புட்கலை ஆரணங்கார்!-சேரப்
பொலிய வலம்வரும் வாரணனே!
ஊரின் முனையெலாம் காவலிடும்-அய்யன்
உலங்கும் ஊர்தியாம் காரணனே!

வெள்ளைப் பரிதியில் துள்ளிப் பறந்திட
அள்ளும் நிலத்தைநீ காத்திடுவாய்!
உள்ளப் படுகையில் உன்னை மிதித்தவர்
முள்ளுச் செயலைநீ நீக்கிடுவாய்!

மதிப்பவர் தம்மைநீ மதித்துவா-ஓடி
மிதிப்பவர் தம்மைநீ விலக்கிவா!
கதிப்புயல் நீக்கிடும் அரிகரா-எங்கள்
நொதிப்புயல் நீக்கவே ஓடிவா!

சாத்தா மேத்தா சம்யுக்தா-நீ
சங்கரன் அரிபிள்ளை அல்லவா!
ஆத்தையே காத்திடும் அரிகரா!-உன்னை
ஆடிப் பாடினோம் ஓடிவா!

மணிகண்டா மாதாபி தாவன்றோ-நீ
வாஞ்சைக் காவலன் தானன்றோ!
அணிகொண்ட கருஞ்சாமி ஆளன்றோ!
ஆடினோம் பாடினோம் வாவன்றோ!

(03)

# மயிலப்புலம் ஐயனாரே!

### பல்லவி

ஆலமரம் அடியிருக்கும் ஐயனாரே-மயிலைக்
கோலநிலம் காவல்செய்யும் ஐயனாரே..ஐயா.. -ஆலமரம்

### அனுபல்லவி

காலமெல்லாம் காரிருளும் காக்கவருவாய்-உன்னைக்
கைதொழுது கண்டவன்யான் பார்க்கவருவாய் ..ஐயா
-ஆலமரம்

### சரணம்

சோலைநிலம் உந்தனுக்குச் சொந்தமல்லவா-நீ
சுற்றிவந்து பார்வையிடும் வேந்தனல்லவா!
காலையிலும் மாலையிலும் மணியொலிக்குமே-அந்தக்
கணப்பொழுதில் ஊர்முழுதும் உனைநினைக்குமே!
-ஆலமரம்

நீயிருந்த அன்னைமண்ணில் உன்னைவிட்டேன்-நில
நெருப்புவந்து சூழ்ந்ததினால் என்னைவிட்டேன்
தாயிருந்த தேசமண்ணில் தீயிருக்கவோ-ஐயன்
தங்கநிலம் தறிகெடநீ பார்த்திருப்பதோ..! -ஆலமரம்

சோதிமய மான எங்கள் ஐயனாரே-நீ
சூழ்ந்ததுன்பம் நீக்கிடுவாய் ஐயனாரே
ஆதிமுதல் தெய்வமெங்கள் ஐயனாரே-எங்கள்
அன்னைமண்ணின் துயர்களைவாய் ஐயனாரே! -ஆலமரம்

## (4)

## வேட்டைக்குப் புறப்பட்டு வாருமையா!

தொண்டர் குழாமெழுந்(து) ஆர்க்க ஆர்க்க
தேவாரப் பண்கொண்டு ஆர்க்க ஆர்க்க
வண்டு மகளிர்கள் வந்து பார்க்க
வாராய் உலாக்கொண்டு அய்ய னாரே!

வேட்டைக்குப் புறப்பட்டு வாரும் ஐயா!-உன்றன்
வெள்ளைக் குதிரையிலே வாரும் ஐயா!
கோட்டையின் காவலா வாரும் ஐயா!-தமிழ்க்
கூத்து ஒலிக்குதே வாரும் ஐயா!

ஊருக்குள் உன்னுலாக் காணவென்று-கூடி
ஒன்றாக எல்லோரும் வீதிவந்தோம்!
நேருக்கு மடையொடு அமுதுமிட்டு-தீப
நேர்த்தி வைத்தோமையா வாருமையா!

மாடுகள் கட்டி நெல்லடிக்கும்-அந்த
மாணிக்க மண்ணைநீ பாருமையா!
ஆடுகள் பாற்பசு நிலம்நனைக்கும்-அந்த
அழகான பூமியைத் தாருமையா!

கைத்தாளம் போட்டுக் கரகங்கள் ஆடி-மயில்
காவடி யோடுவுன் குதிரை பின்னோடி
அத்தா அத்தாவென் றழைத்திடப் பாடி-உலா
ஆக்கிடும் கூட்டத்தை வந்திடு தேடி!

(5)

## அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் அய்யனாரே சரணம்!
ஆடிப் பாடிக் காணவந்தோம்
அய்யனாரே சரணம்-திருப்பொலி
அய்யனாரே சரணம்!
கைய்யில் ஒரு உடுக்கெடுத்துக்
கானமொடு வீணைசெய்து
காணவென்று ஓடிவந்தோம் அய்யனாரே!-உன்னைக்
காணவென்று ஓடிவந்தோம் அய்யனாரே!
-அய்யனாரே சரணம்

நெய்யிலொரு விளக்கெடுத்துத்
நெய்வேத்தி யமுதும்செய்து
மையல்கொண்டு வாசல்வந்தோம் அய்யனாரே!-மயிலைக்
கோவில்வந்து ஆடுகின்றோம் அய்யனாரே!
தையல்இரண்டு பாகம்கொண்டு
தானைப்பரி மீதுநின்று
தங்கமுகம் தந்தருள்வாய் அய்யனாரே-உன்றன்
பொங்குமருள் வேண்டுகின்றொம் அய்யனாரே!
-அய்யனாரே

தம்பிமயில் முருகன்வந்து
தங்கவடி வேலும்கொண்டு
அம்பியுன்னைக் கண்டுநிற்பான் அய்யனாரே-தமிழ்
அள்ளுமிசை பொங்கநிற்பான் அய்யனாரே!
எங்கதுயர் நீயும்கொண்டு
இன்னலுள்ள ஊரும்கண்டு
ஏறும்பரி மீதுவாராய் அய்யனாரே-பரி
காரமென காவல்செய்வாய் அய்யனாரே!
-அய்யனாரே சரணம்

(௬)

## குருவே சரணம்!

அய்யனாரே சரணம் ஓம் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் ஓம் அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் சிறீ அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் சிறீ அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் குரு அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் குரு அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் மணி அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் மணி அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் ஈழ அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் ஈழ அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் தேவ அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் தேவ அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் பூரணை அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் புட்கலை அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் சோதி அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் சோதி அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் அருளும் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் அருளும் அய்யனாரே சரணம்!

(7)

## காவலா! சேவகா!

காவலா சேவகா கருப்புசாமி போலவா
ஆவலாய் உள்ளோம் அய்யா
அய்யனாரே வாவாவா -காவலா

தேவனே வாவாவா திருப்பொலி வாவாவா
தீமையைக் காய்க்கவே
துள்ளித்துள்ளி வாவாவா! -காவலா

கட்டுவன் ஐயனே காணக்காண ஓடிவா!
கொட்டுமுர சார்க்கவே
சாத்தாநீ வாவாவா -காவலா

மயிலப்புல மன்னவா மாபரியில் ஏறிவா
தயிர்மத்து ஓசையிலே
தங்கநடம் ஆடிவா! -காவலா

பள்ளம்புல வேந்தாவா பயிர்நிலம் செழிக்கவா!
உள்ளமே சிலிர்க்கவா
உவப்பாக இனிக்கவா! -காவலா

ஆத்திசூடி மன்றாவா ஆலயத்துட் பொன்னேவா!
ஏத்தியேத்தித் தொழுதோம்வா
எழிற்கோவில் ஆனவா! -காவலா

ஆலமரத் தாயவா அரும்தோன்றல் ஆனவா!
காலகாலா வாவாவா
கரிகரா வாவாவா! -காவலா

## (8)

# அழகான கோவில் அய்யாவா!

மாணவர்கள் விழாவெடுக்க மகிழும் தேவனே-பக்தர்
ஆணவத்தைப் போக்கிவினை அழிக்கும் தேவனே!
-மாணவர்கள்

காணவெனக் காட்சிநல்கும் காவல் நாயகா!
மாணவிளக் கெடுத்துச் செல்லும் மணிகண்டா! !
-மாணவர்கள்

சோழாவத்தை ஆத்திசூடி செல்லும்வீதி மருங்கெலாம்
சூழநின்று காவல்செய்யும் சிவன்கரியின் புத்திரா!
-மாணவர்கள்

வேட்டைக்கு வாவாவா வெள்ளைப்பரி மீதுவா!
கோட்டைக்கு ராசாவா கொள்ளுமணி கண்டாவா! !
-மாணவர்கள்

கலைகளிலே வாழ்வோய்வா காவடிகள் ஏற்போய்வா!
அலையெனவே தோத்திரங்கள் ஆக்கிடவே கேட்கவா!
-மாணவர்கள்

வாழ்ந்தநிலம் மீளமீண்டும் வாழவென்று வாவாவா!
ஆழ்ந்தபற்று மைந்தர்கோவில் ஆக்கிவைத்தார் வாவாவா!
-மாணவர்கள்

அய்யாவா மணிகண்டா வா
சாத்தாவா சந்தம் ஆர்க்கவா!
வெள்ளைக் குதிரை வீரா வா!
வீரக் கருசாமித் தேவா வா! ! -மாணவர்கள்

## (9)

# அகிலமெலாம் வாழுகின்ற தேன்தமிழா!

அகிலமெலாம் வாழுகின்ற தேன்தமிழா-மயிலை
அய்யனார் திருப்பதிக்கு வாவா..வா -அகிலமெல்லாம்

சுகிமடையில் பொங்கல்கண்ட ஆலயத்தைச்
சோதிமய மாக்கிவைத்தார் பார்க்கவா வா..-அகிலமெல்லாம்

ஊனுறக்கம் இன்றிமைந்தர் ஓர்மமுற்றார்-எங்கும்
ஓடியோடி பொருள்குவித்துப் புதுக்கிவைத்தார்!
பூனைகளும் ஓடிவிட்ட புதர்நிலத்தை-இன்று
பூம்பதியாய்ச் செழிக்கவைத்தார் புகழவைத்தார்
-அகிலமெல்லாம்

வெள்ளைப்பரி மீதுறைவான் எங்கள் தேவன்-மழை
வெள்ளமெலாம் சூழுமனை நின்று காப்பான்!
அள்ளுமக்கள் சூழநிற்க அருள் கொடுப்பான்-புது
ஆலயத்துள் வந்துவிட்டான் காணவாரீர்! -அகில..

## (10)

# தமிழ்தந்து என்னை..!

அய்யனாரு ஆலயத்தை
வந்துபாருங்க!
அட வந்துபாருங்க! -அய்யன்
வண்ணமுகங் கொண்டபதி
வடிவைப் பாருங்க!-அய்யா
வடிவைப் பாருங்க! -அய்யனாரு

நெய்யிலபி ஷேகம்தன்னை
நெஞ்சிற் காணுங்க!-நீங்க
நெஞ்சிற் காணுங்க-தீபம்
நெக்குருகிக் காணும்சோதி
நிசத்தைப் பாருங்க!-நீங்க
நிசத்தைப் பாருங்க! -அய்யனாரு

கையிலுடுக் கடித்தடித்துக்
கானம்பாடுங்க!-அய்யன்
கானம் பாடுங்க!
கடலைப்போலே அருளைக்காட்டும்
காட்சிபாருங்க!-அவன்
கண்ணைப் பாருங்க! -அய்யனாரு

வெள்ளைப்பரி மீதேறும்
வீரன்பாருங்க-அய்யன்
வீரம் பாருங்க!
வேட்டையாடி நாட்டைக் காக்கும்
வேளை பாருங்க-புதிய
வேளை பாருங்க! -அய்யனாரு

தாள மேளம் நாதவெள்ளம்
ததும்பும் பாருங்க-அரிகரத்
தாடல் பாருங்க!
சூழும் மக்கள் பொங்கலிடும்
தெய்வம் தானுங்க-அய்யனார்த
தெய்வம் தானுங்க!

**(அய்யனார் பஜனைப் பாடல்கள் முற்றிற்று)**

# ஐயனார் அருள்மணிச் செண்பக மாலை!

பிறந்ததும் வளர்ந்ததும் பெயர்கொண்டு நடந்ததும்
பிணைப்புனக் கானவொன்று!
பெற்றவ ரோடுவந் துன்பொங்கல் படைத்ததும்
பெருங்கதை யானவொன்று!
கறந்தபால் அபிடேகங் கனியோடு தேனிட்ட
காட்சியும் அருளுமுண்டு!
கலையோடு செந்தமிழ்க் கானமும் கரகமும்
கவின்பெற்ற திருவுமுண்டு!
மறந்திடப் போகுமோ? மயிலப்பு லம்வளர்
மன்னவா நின்காதலே!
மருவுமார் துருவமும் வளநாடு காண்கினும்
மாறுமோ நின்சோதியே!
திறம்பாடு மென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி ஐயனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -01

அகல்விளக் கோடுநீ அடரிருட் சாமத்தும்
அலைந்திடக் காண்பருண்டு!
ஆலயம் பறபல வாகிடப் பறக்குமுன்
அருட்சோதி காண்பருண்டு!
புகலெலாம் காவலென் றுவந்திடும் அய்யனைப்
புலத்தொடும் பலர்பேசுவார்!
பொய்கையாய் நீர்வரப் பெருங்கோடை தவிர்த்தவுன்
பெருங்கதை தனையாளுவார்!
செகமாகப் பக்தர்வந் துனையேற்றச் செல்வமாய்த்
தினைப்புலஞ் செழித்துவருமே!
தீராத நோய்தீர நின்பாட்டு நாடெலாந்
தினந்தோறும் அலையாகுமே!
திகம்பாடும் என்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி ஐயனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -02

நடையாக நடைவைத்து நல்லவூர் தனிலாக
நல்மைந்தர் நிதிகோருவர்!
நனிதான பெருங்காசும் நலிகாசு மானாலும்
நல்லவர் நிதியாகுவர்!
மடையாகப் பொங்கலும் மாவீதி யருட்கோலம்
மன்றிலே ஊற்றாகுவர்!
மாணவர் புகழ்க்கலி வைகலுஞ் சார்ந்திட

மறைபோலுஞ் சிறப்பாகுவர்!
படையாக வந்தநற் பாபராய்த் திருப்பொலிப்
பதியோடும் நிலையாகுவர்!
பகவானின் அருள்பாடும் படியாகத் தாமுற்ற
பவவினை கலைந்தாடுவர்!
தொடையாகும் என்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி ஐயனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -03

மாடுபரி வாரமென மகிழ்ந்துலவுஞ் செறிகாடு
வழங்குவாய் அய்யனாரே!
மாலையில் ஊர்வந்து மடிசொட்ட நிலமீர
மாகுமே அய்யனாரே!
தோடுபுனை மாதிருவர் தோன்றவரும் ஐயனாய்த்
துள்ளுபரி மீதிலுறுவாய்!
சுடர்கொண்ட விழியாகுஞ் சோதிவனங் காட்டுமெழிற்
செஞ்சோலை யாகவருவாய்!
சூடுகளும் பாடுகளும் தொடர்ந்துவரா திருந்திடவே
தூயநிலங் காக்கவருவாய்!
சூதுகளும் வாதுகளும் தீக்கோடும் தூர்ந்துவிடத்
தெய்வநிலம் ஆக்கிவருவாய்!
தேடும்பா வென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -04

தேயிலைத் தோட்டமெனத் தெரிந்தாடு மாப்பயிர்
திக்கெலாந் தலைகாட்டுமே!
தெளிந்தாடுந் தூரவிலே நெளிந்தாடுங் கதிரிலே
துயர்நீப்பாய் ஒருபக்கமே!
வாயிலைக் காணவே வணங்குவார் ஏகிடும்
வண்ணமும் உனதுஅன்றோ!
மண்வெட்டி தோளிலே வைத்தவர் தான்நின்று
வணங்குவர் தானுமன்றோ!
நோயிலே துடிப்பவர் நீறுதந் தாற்றிடும்
நின்னருள் பெரிதாகுமே!
நெடுவழி யானாலும் நின்காவல் கண்டவர்
நிசத்திலே ஊர்வாழுமே!
தோயிற்பா வென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே!
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -05

எட்டவ தாரமும் எட்டெனும் ரூபங்கள்
எடுத்ததாய்ச் சரிதமுண்டு!
இரும்பேயாள் மகரிஜி இறைவரம் பெற்றபின்
இடரிட்ட கொடுமைகண்டு
கெட்டபேய் தனையாடிக் கீழவள் வரம்தீயக்
கூடிய அரன்அரியார்
கொடுத்தமணி கண்டனென குவலயத் துதித்துநீ
குருதியுறு பிசாசுவென்றாய்!
அட்டதிக்கும் அய்யப்பன் என்றுலவும் ஆசானென்
னருபிரமச் சரியனென்றாய்!
அகிலமெலாம் விரதமிட அருளிட்டு இருமுடியில்
அமர்ந்திட்ட ஒருவனானாய்!
தொட்டபா வென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -06

கேண்மையாம் மயிலப்பு லத்தொடுங் கிளுவையில்
குடிகொண்டு தோற்றமிட்டாய்!
குடையாக்கி ஆல்மரக் கொப்பெலாம் பரந்திடக்
கூடாரா மாகிநின்றாய்!
தூண்போன்றுந் தாங்கினாய்! தூரவோரைப் பாங்கனாய்த்
தொடரவழி காத்துநின்றாய்!
துய்யமழைக் கட்டுவன் தேங்குசுனை மருவியே
திருவாரூ ராகநின்றாய்!
காண்போர்க்குக் சாட்டையுங் கருப்புசாமி யாமெனக்
கனிநிலத் தோடுநின்றாய்!
காத்தவ ராயன்பூ தக்கணங்க ளனைத்தோடுங்
காவலென ஆடுகின்றாய்!
தூண்போலு மென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -07

நன்னியர் பரம்பரை உன்னைவே ராக்கிய
நாளுண்டு அய்யனாரே!
நாதமுந் தாளமும் நல்லிசை யாமொடும்
நடமிடும் அய்யனாரே!
சென்னியில் உழைப்பொடுஞ் சிந்திடும் ஏரிலே
சிந்துரன் ஆகிவந்தாய்!
தேன்கவி வேந்தனார் திருவாலின் கீழ்நிற்கத்
தென்தமி ழோடவைத்தாய்!

உன்னைநி னைந்துருகி ஒடுங்குவார்க் கென்றும்நீ
உறும்துயர் போகவைப்பாய்!
உயிர்மேவி வினையாடி உள்ளாடும் நவையாடி
உத்தமர் ஆகவைப்பாய்!
தென்றலாய் என்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -08

ஏர்கொண்ட வாவியும் இறைகொண்ட பூமியும்
இதம்கெட்டுப் போச்சுதையா!
இயலோடு மக்களும் இடம்பெயர்ந் திட்டதோர்
இனமாகி விட்டதையா!
பார்கண்ட உன்நிலப் பயிரிலே தீப்பற்றிப்
பரவியே அழிந்ததையா!
பலகாலத் தின்மீறிப் பதியுன்னை உருவாக்கப்
பலர்கூடி நடக்குதையா!
ஊர்வந்து திருவேற்றி உயிராகத் தினமேற்றி
உன்மைந்தர் ஓடிவந்தார்!
உலகெங்கு மிருந்தவர் உன்னாவி கொண்டவர்
உருக்கொண்டு பாடிவந்தார்!
தேர்பாவி லென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -09

அருள்கொண்ட பார்வையுந் தாகுதுயர் போகவும்
அய்யனே ஓடிவருவாய்!
ஆலய மாக்கியுன் னடியார்கள் பெருந்திர
ளாயினர் ஓடிவருவாய்!
தெருவுற்ற மானிடர் திரும்பிய துரவுக்குள்
தீர்த்தனாய் ஓடிவருவாய்!
தீப்பற்றிப் போனாலும் நின்பற்றுப் போகாத
நெஞ்சத்திற் கூடிவருவாய்!
குருவான சாத்தனே! குயிலான நிருத்தனே
குதித்துநீ ஓடிவருவாய்!
கிம்புரிகள் மத்தளங் கொஞ்சுமணி வீணையுங்
கேட்குதே ஓடிவருவாய்!
திருபாவி லென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -10

தான்தோன்றி அய்யனாய்த் தளிரடிக் கிழவையில்
தலமோங்க அவதரித்தாய்!
தரும்தீபக் கற்பூரத் தாலொடுஞ் சந்தனம்
தனைக்காட்டி உருவாகினாய்!
வான்தோன்றி மகிழவரு வடிவாகக் கலைவந்து
மன்னவுனைச் சொல்லவைத்தாய்!
வார்மாது அருள்பெற்று வந்தவுரு தன்னிலுனை
வணங்கவெனப் புகலுரைத்தாய்!
தேன்பொங்கல் படைக்கவுந் திருவிழாப் போதாட்டுந்
திருவாரூர்க் குலமாகினாய்!
தோன்றிய மரத்தடித் துளிர்விட்ட ஆல்மரத்
தோப்பிலே பலமாகினாய்!
தேன்பாவி லென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செய்பகத் தையனாரே -11

ஊர்மனை யோடுலா உற்றுநீ வந்தபின்
ஊஞ்சலில் ஆடிநிற்பாய்!
உள்ளக்க டல்வெளி யோங்கார மாகிட
உற்சவம் தந்துநிற்பாய்!
சேர்படைச் சாமியுஞ் சிலம்பொலி யார்க்கவுந்
திருக்கணங் களும்வருவார்!
சீர்பெறு வெள்ளையஞ் சூர்ப்பரி யேறியுன்
தேவிய ரும்வருவார்!
ஆர்வய மாகிடும் அய்யநின் சோதியுள்
அடைக்கல மானபின்னால்
அன்புளந் தந்தவர்க் கருந்துயர் நீக்கிடும்
அருளது உண்மையென்பேன்!
தேர்ப்பாவி லென்மனத் தூரிகை யானநெய்த்
திருப்பொலி அய்யனாரே
துயில்வெள்ளைப் பரியேறும் மயிலப்பு லம்வளர்
செண்பகத் தையனாரே! -12

**ஐயனார் செண்பகமாலை முற்றிற்று**

# ஐயனார் விண்ணப்பத் தோத்திரம்!

பள்ளம் புலத்தும் மயிலப் புலத்தும் மகிழ்ந்துலவி
அள்ளக் கவரும் திருப்பொலிக் கட்டுவன் ஆலயத்தே
தெள்ளத் தெளிவாய் உருகிப் பொலிந்து தெளிந்தநிலம்
வள்ளற் கரமாய் வழங்கப் பொலிந்தாய் மணிக்கரனே!

ஊரும் பரவத் துலகும் பரவத் தொளிர்வதனப்
பேரும் பரவப் புகழும் பரவப் புரிதுதியில்
வேரும் பரவ விளங்குந் தமிழார் விரிகவயுஞ்
சேருந் திரவியத் தோரொடு மானாய் சிவனரியே!

அச்சில் வடித்தவர் ஆலயச் சிற்பிய ராமொடுபல்
மெச்சுங் கலையுள மேன்மையர் பற்பல மெய்யுழைப்பார்
துச்சமென் றாகத் திருப்பொலி அய்யனைச் சுமந்தவர்கள்
உச்சிகள் மோந்து உனதருள் ஈவாய் அரிகரனே!

இந்தநற் பாவொடும் ஈர்த்துரைத் திட்டவர் ஏற்பநின்று
வந்தறந் தந்தவர் வாருழைப் பாக்கிய வண்ணமுளார்
பந்தறும் பாகப் பவவினை எல்லாம் பகுத்தெடுத்து
அந்தமில் லாரருள் ஆக்குவை யாமெங்கள் அய்யனாரே!

ஆத்திசூடி மக்களின் ஒன்றியம் ஆக்கும் அணித்தொடர்
ஏத்தி யிருத்தப் பொலிகிற தாமுயர் இன்பணிதான்
வாத்தியார் ஆக நினதருள் ஆக்கும் வனிதமதின்
சூத்திரம் அன்றோ? திருவருள் செய்வாய் திருக்கரனே!

# அய்யனார் கீர்த்தனைப் பாடல்கள்

## 1-அல்லல் தீர்க்க மாட்டாயா?

அய்ய னாரேநின் கைம்மலர் தொழுதேன்
அல்லல் தீர்க்க மாட்டாயா?-என்
அல்லல் தீர்க்க மாட்டாயா? –அய்ய

தெய்வமே என்னைச் சேவித்து ஒருகால்
தீவினை போக்க மாட்டாயா-என்
தீவினை போக்க மாட்டாயா? -அய்ய

நலிபடும் துன்ப நாளொடும் வாழ்வில்
நனிநடம் ஆடிக் காட்ட வருவாயா?-என்
வலியிலா வாழ்வைநீ மாற்றவோர் கானம்
வந்தநீ பாடிக் காட்ட மாட்டாயா?-இசை
வார்ப்புநீ தந்திட மாட்டாயோ -அய்ய

ஆல்மரம் நின்றுநான் அழைந்த பூமியின்
அடியிலே வந்திட அழைக்காயோ?-என்
கால்அடி நின்று கருணையோ டுவுன்
காதல் வயப்பட வைக்காயோ?-என்
கையறு நிலையைநீ நீக்காயோ? -அய்யனாரே நின்

-குமரக்கோட்டனார்

## 2-உன்புகழ் பாடிட வாராயோ!


வெள்ளைக் குதிரையில் வீற்றிருந் தேநீ
வீதியில் வருவாயோ..!-அட
வெள்ளைக் குதிரையில் வீற்றிருந்து நீ
வீதியில் வருவாயோ...? —வெள்ளைக்

உள்ளக் குமுறலை உன்னிடம் சொல்லவே
ஓடி ஓடிநீ வருவாயோ?-அய்யா
ஓடி ஓடிநீ வருவாயோ?! -வெள்ளைக்

பள்ளம் புலம்வளர் மயிலப் புலத்திலே
உள்ளத் திருப்பொலி உள்ளே யிருந்துநீ
அள்ளும் ஒருமுறை ஆரோ கணித்துத்தான்
அருளும் காட்சியைத் தருவாயோ!-எனக்காய்
அருளும் காட்சியைத் தருவாயோ..? -வெள்ளைக்

வன்ன மாமயில் மகிழும் குமரனை
வந்து நாளொடும் பார்க்காயோ!-அவன்
மின்னும் திருப்புகழ் போலயான் நின்றனை
மேவிப் பாடிட வைக்காயோ-தமிழ்
வெல்லம் குழைத்துநீ தாராயோ! -வெள்ளைக்

-குமரக்கோட்டனார்





தீவகன் வரைகலை நிலையம்-416-931-6305
அழுத்தகம்: ஜே.ஜே.பிறின்ரேர்ஸ்-இசுகாபரோ-416-298-9322